Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)



2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 43 | உள்ளூர் - 12.02.2026 | வியாழன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 54 | * Issue 43 | வெளியூர் - 13.02.2026 | வெள்ளி | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**கனரக வாகன தொழிற்சாலை; 220 காலியிடங்கள்!**

**30 ஆண்டுகளுக்கு பின் "கேந்திர யோகம்"; யாருக்கு நல்லது?**

**யாருடன் கூட்டணி? - பிரேமலதா!**

**நுழைவுச்சீட்டு இருப்பவர்களுக்கு மட்டுமே அனுமதி! த.வெ.க.!**

# பிரதமர் மோடி மார்ச் 1-ந்தேதி புதுச்சேரி வருகை: முதல்-அமைச்சர் ரங்கசாமி தகவல்!

புதுச்சேரி, பிப். 12–

புதுச்சேரியில் சட்டசபை தேர்தல் விரைவில் நடக்க உள்ள நிலையில் தற்போதைய என்.ஆர். காங்.,–பா.ஜ.க. கூட்டணி தொடர்வது உறுதியாகி உள்ளது. அதையொட்டி தேர்தல் அறிவிப்புக்கு முன்பாக பிரதமர் மோடியை வரவழைத்து, அரசு விழா நடத்தி மத்திய, மாநில அரசுகள் சார்பில் மெகா திட்டங்களை அறிவிக்க பா.ஜ.க.வினர் ஏற்பாடு செய்தனர்.



அதன்படி இன்று 12–ந்தேதி பிரதமர் மோடி புதுச்சேரிக்கு வர இருப்பதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் 14, 16 மற்றும் 21–ந் தேதிகள் அறிவிக்கப்பட்டது. பிரதமர் புதுச்சேரிக்கு வரும் தேதி உறுதி செய்யாத நிலையிலும், பிரதமர் தொடங்கி வைக்க வேண்டிய பணிகள் வேகப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் வில்லியனூரில் நடந்த அரசு விழாவில் பங்கேற்ற முதல்–அமைச்சர் ரங்கசாமியிடம், பிரதமர் மோடியின் புதுச்சேரி வருகை எப்போது என நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அப்போது அவர் மார்ச் 1–ந்தேதி பிரதமர் மோடி புதுச்சேரி வருவார் என தெரிவித்தார்.

பிரதமர் மோடி புதுச்சேரி வருகை உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து, அவரது வருகைக்கு முன்பாக கூட்டணியில் தொகுதி பங்கீடு பேசி முடிவு செய்து பிரதமர் பங்கேற்கும் விழா மேடையில் கூட்டணி கட்சி தலைவர்களை பங்கேற்க வைப்பதற்கான பணிகளை பா.ஜ.க. மற்றும் என்.ஆர். காங்கிரஸ் கட்சியினர் துரிதப்படுத்தி வருகின்றனர்.

# கீழடியில் ரூ.22 கோடி செலவில் திறந்தவெளி அருங்காட்சியகம்: முதலமைச்சர் திறந்து வைக்கிறார்!

மானாமதுரை, பிப். 12–

சிவகங்கை மாவட்டம் கீழடியில் மத்திய, மாநில தொல்லியல் துறை சார்பில் அகழாய்வு நடந்த இடங்கள் திறந்த வெளி அருங்காட்சியகமாக மாற்றப்படும் என தமிழக அரசு அறிவித்து, கடந்தாண்டு ஜனவரியில் ரூ.17 கோடியே 80 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது.



சுமார் 67 ஆயிரத்து 343 சதுர மீட்டர் பரப்பளவில் இரண்டு அரங்குகளாக காட்சிப்படுத்தும் பணிகள் தொடங்கின. ஏழாம்கட்ட அகழாய்வு நடந்த இடம் ஒரு அரங்கமாகவும், இரண்டு, நான்கு, ஆறாம் கட்ட அகழாய்வு நடந்த இடம் இரண்டாம் அரங்கமாகவும் மாற்றும் பணி நடந்து வந்தது. இதில் முதலாம் அரங்கம் மட்டும் திறப்பு விழாவிற்கு தயாரான நிலையில், நாளை (13–ந்தேதி) முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்த வெளி அருங்காட்சியகத்தையும் திறந்து வைக்க உள்ளார்.

இந்தியாவிலேயே முதன் முறையாக கீழடியில் ரூ. 22 கோடி ரூபாய் செலவில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைகிறது. பண்டைய கால மக்களின் வாழ்வியல் முறைகள், பணிகள், அணி கலன்கள் உள்ளிட்டவைகளை பொது மக்கள் நேரில் காண உள்ளனர்.

திறந்த வெளி அருங்காட்சியக பணியின் போது ரூ. 17 கோடியே 80 லட்சம் என திட்டமிடப்பட்டது. செலவீனம் அதிகரித்ததால் தற்போது ரூ. 22 கோடியாக திட்டமதிப்பீடு அதிகரித்துள்ளது.

# செங்கோட்டை குண்டுவெடிப்பில் ஜெய்ஷ் இ அமைப்புக்கு தொடர்பு.. ஐ.நா. அறிக்கையில் வெளியான பகீர் தகவல்..!

செங்கோட்டை, பிப். 12–

தென் ஆசியாவில் பயங்கரவாதம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 37–வது அறிக்கையில் ஒரு முக்கிய தகவல் வெளியாகியுள்ளது. நவம்பர் 10–ஆம் தேதி டெல்லி செங்கோட்டைக்கு அருகே நடந்த தாக்குதலில், பாகிஸ்தானை தளமாகக் கொண்ட ஜெய்ஷ்–இ–மொஹம்மது (JeM) பயங்கரவாத அமைப்புக்கு தொடர்பு உள்ளது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது..





ஒரு ஐநா உறுப்பு நாடு, அந்த தாக்குதலுக்கு ஜெய்ஷ்–இ –முகமது அமைப்பே பொறுப்பு எனக் கூறியதாக ஐநாவுக்கு தகவல் வழங்கியுள்ளது. இதன் மூலம், டெல்லி தாக்குதலின் பின்னணியில் அந்த அமைப்பு இருந்திருக்கலாம் என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது.

இதற்கு முன்பு, அக்டோபர் 8–ஆம் தேதி, ஜெய்ஷ்–இ–மொஹம்மது தலைவர் மசூத் அசார், அந்த அமைப்பிற்காக "ஜமாஅத்–உல்–முமினாத்" என்ற பெயரில் தனியான பெண்கள் பிரிவை தொடங்கியதாக அறிவித்திருந்தார். இந்த பிரிவு தற்போது ஐநா தடை பட்டியலில் இடம்பெறவில்லை என்றாலும், பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குகிறது என்ற குற்றச்சாட்டு உள்ளது.

ஐநா அறிக்கை, ஜெய்ஷ்–இ –முகமது அமைப்பின் தற்போதைய நிலை குறித்து உறுப்புநாடுகளுக்கிடையே கருத்து வேறுபாடு இருப்பதாகவும் குறிப்பிடுகிறது. ஒரு நாடு அந்த அமைப்பு இன்னும் செயல்பாட்டிலுள்ளதாக கூறும் நிலையில், மற்றொரு நாடு அது தற்போது "செயலற்றதாக" மாறிவிட்டதாக தெரிவிக்கிறது.

இதற்கிடையில், ஐநா தடைகள் விதிக்கப்பட்ட பின்னர் ஜெய்ஷ்–இ–மொஹம்மதும், லஷ்கர்–இ–தொய்பாவும் இனி செயல்படவில்லை என்று பாகிஸ்தான் முன்பே கூறி வந்துள்ளது.

மேலும், 2025 ஏப்ரலில் நடைபெற்ற பஹல்காம் தாக்குதல் குறித்தும் இந்த அறிக்கை குறிப்பிடுகிறது. அந்த தாக்குதலில் 26 பொதுமக்கள் உயிரிழந்தனர். இந்த தாக்குதலை லஷ்கர்–இ–தொய்பாவின் துணை அமைப்பாக கருதப்படும் "தி ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட்" நடத்தியதாக கூறப்படுகிறது.

**டெல்லி வெடிகுண்டு தாக்குதல் விவரம்:**

நவம்பர் 10–ஆம் தேதி மாலை, லால் குவிலா மெட்ரோ நிலையம் அருகே மெதுவாக சென்று கொண்டிருந்த ஹ்யூண்டாய் i20 காரில் சக்திவாய்ந்த வெடிகுண்டு வெடித்தது. இந்த சம்பவத்தில் 15 பேர் உயிரிழந்தனர், பலர் காயமடைந்தனர். மேலும், அருகில் இருந்த பல வாகனங்கள் தீப்பிடித்து எரிந்ததால், அந்த பகுதியில் பெரும் சேதம் ஏற்பட்டது.

ஆரம்ப விசாரணையில், இந்த சம்பவம் பாரிதாபாதில் கண்டுபிடிக்கப்பட்ட சந்தேகத்திற்குரிய பயங்கரவாத குழுவுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக பலரை போலீஸார் விசாரணை க்காக கைது செய்துள்ளனர். தாக்குதலுக்குப் பொறு ப்பானதாக சந்தேகிக்கப்படும் பயங்கரவாத வலையமைப்பை முழுமையாக கண்டறிந்து ஒழிக்கும் பணியில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

## பாஸ்போர்ட் விண்ணப்பம் செய்ய போறீங்களா?

# வரும் 15 ஆம் தேதி முதல்

## எல்லாமே மாறப்போகுது..!!

டெல்லி, பிப். 12–

இந்தியாவில் முக்கிய அடையாள ஆவணமாகவும், வெளிநாடு செல்வதற்கான பிரதான ஆவணமாகவும் பாஸ்போர்ட் இருக்கிறது. இதற்கு முன்பு பாஸ்போர்ட் விண்ணப்பம் செய்வது என்றால் மாத கணக்கில் காத்திருக்க வேண்டும். ஆனால் தொழில்நுட்பங்களின் வருகை அதனை மாற்றிவிட்டது. தற்போது ஆன்லைனிலேயே பாஸ்போர்டிற்கு விண்ணப்பம் செய்துவிடலாம். எந்த இடைத்தரகரும் தேவையில்லை.





தற்போது ஆன்லைன் விண்ணப்ப முறையை மேலும் எளிதாக்கும் வகையில் வரும் 15 ஆம் தேதியிலிருந்து பல்வேறு முக்கியமான மாற்றங்களை அறிமுகம் செய்ய இருக்கின்றனர். நீங்கள் புதிதாக பாஸ்போர்ட் பெற விண்ணப்பம் செய்பவர்களாக இருந்தாலும் சரி அல்லது ஏற்கனவே பாஸ்போர்ட் வைத்திருந்தாலும் சரி இந்த மாற்றங்களை தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது. போலி பாஸ்போர்ட்களை தயாரித்து ஆங்காங்கே மோசடிகள் நடைபெறுகின்றன. இந்த மோசடிகளை தடுக்கும் வகையிலும் பாஸ்போர்ட் வழங்கும் நடைமுறைகளை எளிமையாக்கும் வகையிலும் வரும் 15 ஆம் தேதியிலிருந்து புதிய விதிமுறைகள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட இருக்கின்றன.

இந்த திருத்தி அமைக்கப்பட்ட விதிமுறைகளின் படி இதற்கு முன் பாஸ்போர்ட் வேண்டி விண்ணப்பம் செய்பவர்கள் அதிக எண்ணிக்கையிலான ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டி இருந்தது அது மாற்றப்பட்டுள்ளது. டிஜிட்டல் முறையிலேயே ஆவணங்கள் சரிபார்ப்பு நடத்தப்படும். என்வே ஆதார் உள்ளிட்டவற்றை நகல்களை கொண்டு சென்று தாக்கல் செய்ய வேண்டிய தேவை இல்லை. இதன்படி நம்முடைய அடையாளம் மற்றும் முகவரிக்கான சான்றிதழாக ஆதார் மற்றும் அரசால் வழங்கப்பட்ட ஆவணங்கள் பிரதான ஆவணங்களாக பயன்படுத்தப்படும். இந்த ஆவணங்களை டிஜிட்டல் முறையிலேயே சமர்ப்பித்து டிஜிட்டல் முறையிலேயே சரிபார்க்கும் வகையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

வழக்கமாக பாஸ்போர்ட் விநியோகத்தில் போலீஸ் வெரிஃபிகேஷன் எனப்படும் காவல்துறையினர் சரிபார்ப்பு தான் தாமதமாகும். ஒரு நபர் பாஸ்போர்ட் வேண்டும் என விண்ணப்பம் செய்தால் அவருடைய பின்புலத்தை விசாரித்து காவல்துறை சான்றிதழ் தர வேண்டும். இதனால் நமக்கு பாஸ்போர்ட் கிடைப்பதும் தாமதமாகிறது. ஆனால் இந்த புதிய நடைமுறைகளின் படி அனைத்துமே டிஜிட்டல் முறையிலேயே மேற்கொள்ளப்பட்டு விடும். காவல்துறையினர் ஆன்லைனிலேயே தகவல்களை பரிமாற்றம் செய்துவிடுவார்கள் என்றும் சொல்லப்படுகிறது. எனவே காவல்துறை சரிபார்ப்பினால் ஏற்படக்கூடிய தாமதம் இனி இருக்காது என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஏற்ற வகையில் மத்திய அரசு பாஸ்போர்ட் விண்ணப்ப போர்ட்டலில் பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்திருக்கிறது.


ஆன்லைனிலேயே விண்ணப்பங்களை சமர்ப்பணம் செய்வது, ஆவணங்களை அப்லோடு செய்வது, அப்பாயின்மென்ட் தேதி புக்கிங் செய்வதை எளிமையாக்குவது , நிகழ் நேரத்தில் உங்களுடைய விண்ணபத்தின் நிலையை கண்டறிவது ஆகியவை மேம்படுத்தப்பட்டுள்ளன.

குழந்தைகளுக்கான பாஸ்போர்ட்டுக்கு டிஜிட்டல் முறையிலேயே அவர்களின் பிறப்பு சான்றிதழை தாக்கல் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

## நரவனேவின் சுயசரிதை புத்தகத்தை காட்டி ராகுல்காந்தி விமர்சனம்! பெங்குவின் ரேண்டம் நிறுவனம்

டெல்லி, பிப். 12–

நாடாளுமன்றத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்திய, முன்னாள் ராணுவ தளபதி நரவணேவின் சுயசரிதை புத்தகத்தை காட்டி ராகுல்காந்தி பேசியதைத் தொடர்ந்து, பெங்குவின் ரேண்டம் நிறுவனம் விளக்கம் வெளியிட்டு உள்ளது. இன்னும் 'வெளியிடப்படாத' ஜெனரல் நரவனே நினைவுக் குறிப்பு, நாடு முழுவதும் சர்ச்சையைத் தூண்டியுள்ள நிலையில், பெங்குவின் புத்தக வெளியீட்டாளர் தெளிவுபடுத்தல்களை வெளியிட்டுள்ளது.





டிஜிட்டல் மற்றும் பிற வடிவங்களில் கையெழுத்துப் பிரதி சட்டவிரோதமாகப் புழக்கத்தில் விடப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து டெல்லி காவல்துறை விசாரணையைத் தொடங்கியதைத் தொடர்ந்து வெளியீட்டாளரின் அறிக்கை வந்துள்ளது. மக்களவை எதிர்க் கட்சி தலைவர் ராகுல்காந்தி குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்போது மக்களவையில் பேசும்போது, சீன ராணுவ ஆக்கிரமிப்பு குறித்து முன்னாள் ராணுவ தளபதி எம்.எம்.நரவனே தனது சுயசரிதை புத்தகத்தில் எழுதி இருப்பதாக கூறி, அந்த புத்தகதை காட்டி சர்ச்சையை எழுப்பினார். ஆனால் அந்த புத்தகம் இன்னும் வெளியிடப்படவில்லை என்று மத்திய அரசு மறுத்தது. இது அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதற்கிடையே, புத்தகத்தின் கையெழுத்து பிரதிகளை சட்டவிரோதமாக புழக்கத்தில் விட்டதாக டெல்லி போலீசார் ஒரு வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து புத்தக நிறுவனமான பெங்குவின் ரேண்டம் ஹவுஸ் இண்டியா விளக்கம் வெளியிட்டு உள்ளது. அதில், முன்னாள் ராணுவ தளபதி நரவனே எழுதிய 'போர் ஸ்டார்ஸ் ஆப் டெஸ் டினி புத்தகத்தின் பிரத்யேக பதிப்புரிமையை நாங்கள் பெற்றுள்ளோம். அந்த புத்தகம் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை; அச்சு வடிவிலோ, டிஜிட்டல் வடிவிலோ எந்த பிரதியும் பொதுமக்களுக்கு வெளியிடப்படவில்லை என்று புத்தக பதிப்பகம் திட்டவட்டமாக தெரிவித்தது. எனவே, அச்சு வடிவிலோ, டிஜிட்டல் வடிவிலோ புத்தகத்தை முழுமையாகவோ, பகுதி அளவிலோ வெளியிட்டால், அது பதிப்புரிமையை மீறுவதாக அமையும். அத்தகைய நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். அந்த பிரதிகள் பறிமுதல் செய்யப்படும் என்று பெங்குவின் ரேண்டம் தெரிவித்துள்ளது. இதற்கிடையில் மத்தியஅரசு, ஓய்வுபெற்ற மற்றும் பணியில் இருக்கும் ராணுவ அதிகாரிகள் புத்தகங்கள் எழுதுவது குறித்த விதிகளை கடுமையாக்க ஒன்றிய அரசு புதிய விதிமுறைகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, தற்போதுள்ள சேவை விதிகள் மற்றும் அதிகாரப்பூர்வ ரகசியங்கள் சட்டம் ஆகியவை உள்ளடக்கிய புதிய விதிகளை அரசு உருவாக்கி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடை நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் (Conversion Conclave), "முதலீடுகளின் முன்னேற்ற அறிக்கை" –யை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாகுடோ ஐவானகா, B.I.G. Tech நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் ராஜு பாண்டியன், நார் பிரெம்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மார்கஸ் பெர், பாரத் பயோ டெக் நிறுவனத்தின் செயல் தலைவர் கிருஷ்ணா எல்லா, டாபர் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மோகித் மல்கோத்ரா, தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

த தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 12.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
தை மாதம் 29-ம் தேதி

## வியப்பில் மருத்துவ உலகம்..!!



மருத்துவத் தொழில்நுட்ப உலகில் மற்றுமொரு மைல்கல்லாக, மூளை தொடர்பான பாதிப்புகளை கண்டறிவதில் செயற்கை நுண்ணறிவு (AI) புதிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. மிச்சிகன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள 'பிரைமா' (PRIMA) என்ற அதிநவீன AI தொழில்நுட்பம், மருத்துவத் துறையினரை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

சுமார் 2.2 லட்சம் மூளை MRI ஸ்கேன்களைக் கொண்டு விரிவான பயிற்சி அளிக்கப்பட்ட இந்தத் தொழில்நுட்பம், மனித மூளையில் ஏற்படும் 50–க்கும் மேற்பட்ட வெவ்வேறு பாதிப்புகளை அடையாளம் காணும் திறன் கொண்டது. குறிப்பாக, ஒரு எம்.ஆர்.ஐ ஸ்கேனை ஆய்வு செய்து முடிவுகளை வழங்க இது எடுத்துக்கொள்ளும் காலம் வெறும் சில விநாடிகளே. வேகத்தில் மட்டுமின்றி, துல்லியத்திலும் அசத்தி வரும் இந்தத் தொழில்நுட்பம், சுமார் 97.5 சதவீத துல்லியத்துடன் முடிவுகளை கண்டறிந்து சாதனை படைத்துள்ளது.


நரம்பியல் நிபுணர்களின் பற்றாக்குறை நிலவும் பின்தங்கிய பகுதிகளில், இந்த 'பிரைமா' தொழில்நுட்பம் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிக்கலான மூளை நோய்களை ஆரம்பக்கட்டத்திலேயே மிகத் துல்லியமாகக் கண்டறிந்து, விரைவான சிகிச்சையை தொடங்க இது பெரிதும் உதவும்.

## அதிரடியாக குறைந்த தங்கம் விலை!



சென்னை, பிப். 12–
சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,520 குறைந்து ரூ.1,16,800–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.190 குறைந்து ரூ.14,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று 3–வது நாளாக மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி 300 ரூபாய்க்கும் பார் வெள்ளி ரூ.3 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.



## சினிமா துளிகள்..!

## நடிகை Vs இயக்குநர்.. கவனம் ஈர்க்கும் வரலட்சுமி சரத்குமாரின் வீடியோ!




நடிகர் சரத்குமாரின் மகள் என்ற அடையாளத்துடன் தமிழ் சினிமாவில் அடியெடுத்து வைத்து தனக்கென ரசிகர் பட்டாளத்தை உருவாக்கியவர் நடிகை வரலட்சுமி சரத்குமார்.

'போடா போடி' படத்தின் மூலம் அறிமுகமான இவரது நடிப்பில் தாரை தப்பட்டை, சர்கார், விக்ரம் வேதா, சத்யா, சண்டக்கோழி 2 ஆகிய படங்கள் ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றவை.

தெலுங்கு மற்றும் கன்னட படங்களிலும் நடித்து உள்ளார். விஜய்யின் கடைசி படமான 'ஜனநாயகன்' படத்தில் நடித்துள்ளார். இதனிடையே, மும்பையை சேர்ந்த தொழிலதிபரான நிக்கோலஸ் சச்தேவ் என்பவரை காதலித்து பெற்றோர்கள் சம்மதத்துடன் கடந்த ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இவர்களின் திருமணம் தாய்லாந்தில் கோலாகலமாக நடைபெற்றது. இதன்பின் சினிமாவில் பெரிய அளவில் தலைகாட்டாமல் இருந்து வந்தார்.

இந்த நிலையில், நடிகை வரலட்சுமி, தன் சகோதரி பூஜாவுடன் இணைந்து 'தோசா டைரீஸ்' என்ற புதிய தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கியுள்ளார்.

இந்நிறுவனத்தின் முதற்படமான 'சரஸ்வதி' மூலம் இயக்குநராகவும் வரலட்சுமி அறிமுகமாகிறார். இப்படத்தில் பிரகாஷ் ராஜ், பிரியாமணி, நவீன் சந்திரா உள்பட பலர் நடிக்கின்றனர். தமன் இப்படத்திற்கு இசையமைக்கிறார். படத்தின் படப்பிடிப்பு கடந்த மாதம் நிறைவடைந்தது.

இந்நிலையில், நடிகை Vs இயக்குநர் என்ற தலைப்பில் சரஸ்வதி படம் தொடர்பான சுவாரஸ்யமான விடியோ ஒன்று வெளியாகி கவனம் ஈர்த்து வருகிறது.

## சேலத்தில் த.வெ.க. நிர்வாகிகள் கூட்டம் - நுழைவுச்சீட்டு இருப்பவர்களுக்கு மட்டுமே அனுமதி!



சேலம், பிப். 12–
சேலத்தில் பிப். 13–ல் த.வெ.க. நிர்வாகிகள் கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்க உள்ளார். இந்நிலையில், த.வெ.க. நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொள்ள நுழைவுச் சீட்டு அளிக்கப்பட்டுள்ள 4,998 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக த.வெ.க. பொதுச்செயலாளர் என்.ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;–

"மக்கள் விரும்பும் முதல்–அமைச்சர் வேட்பாளர், தமிழக வெற்றிக் கழகத் தலைவர் கலந்துகொள்ளும் கழக நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் தேர்தல் பரப்புரை நிகழ்ச்சி, நாளை (பிப்ரவரி 13–ந்தேதி) வெள்ளிக்கிழமை அன்று, சேலம் சீலநாயக்கன்பட்டி, KVP கார்டன் உள்வளாகத்தில், மதியம் 12.00 மணி முதல் 3.00 மணிக்குள் நடைபெற உள்ளது. காவல் துறை அனுமதிக்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி இந்த நிகழ்ச்சியானது முழுக்க முழுக்க அனுமதி பெற்றவர்களுக்கான சந்திப்பு நிகழ்ச்சியாக மாவட்ட நிர்வாகிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. QR குறியீட்டுடன் கூடிய நுழைவுச் சீட்டு அளிக்கப்பட்டுள்ள 4,998 பேர் மட்டுமே இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். வேறு யாருக்கும் கண்டிப்பாக அனுமதி கிடையாது.

அனுமதிச் சீட்டு பெறாத கழகத் தோழர்களும், பொதுமக்களும் நேரில் வருவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டுகிறோம். இந்த நிகழ்ச்சியைத் தொலைக்காட்சி நேரலைகளில் கண்டு, அனுமதிச் சீட்டு பெற்றிருப்பவர்கள் மட்டுமே பங்கேற்க முழு ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோத சிகரெட் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்த அரசு தொழில்துறை கூட்டு முயற்சி அவசியம்: பிலிப் மோரிஸ் இந்தியா!

கடலூர், பிப். 26–
கடத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, பிலிப் மோரிஸ் இந்தியா டிரேடிங் பிரைவேட் லிமிடெட் (PM India), சட்டவிரோத புகையிலை மற்றும் சிகரெட் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் தனது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியது.

சட்டவிரோத சிகரெட் வர்த்தகம் அரசு வருவாயை பாதிப்பதுடன், தரக் கட்டுப்பாடு இல்லாத தயாரிப்புகள் மூலம் நுகர்வோருக்கு அபாயத்தை ஏற்படுத்துகிறது என நிறுவனம் குறிப்பிட்டது. இந்த பிரச்சினையை சமாளிக்க அரசு மற்றும் தொழில்துறை இணைந்த அணுகுமுறை அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது.

சட்டப்பூர்வ மற்றும் சட்டவிரோத தயாரிப்புகளை வேறுபடுத்த 'Track and Trace (T&T)' போன்ற முறைகளை இந்திய அரசு அமல்படுத்தி வருவது முக்கிய முன்னேற்றமாகும். 2025ஆம் ஆண்டு PM India மேற்கொண்ட சந்தை ஆய்வில், 10 மாநிலங்களில் 500க்கும் மேற்பட்ட சந்தைகளிலும் 3000 கடைகளில் சட்டவிரோத சிகரெட் இருப்பு கண்காணிக்கப்பட்டது.

மேலும், சுங்க மற்றும் வரித்துறை அதிகாரிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில், PM India நிர்வாக இயக்குனர் நவீன் கர் கூறுகையில், "சட்டவிரோத வர்த்தகம் முறையான வணிகத்தையும், அரசு வருவாயையும் பாதிக்கிறது. இதை கட்டுப்படுத்த அரசு தொழில்துறை கூட்டு முயற்சி அவசியம். உலகளாவிய T&T அனுபவத்தை இந்தியாவில் உள்ளூர் கூட்டாண்மைகளுடன் இணைத்து அமலாக்கத்தை வலுப்படுத்துகிறது," என்றார்.

## தொழில்நுட்பம் சார்ந்த எதிர்கால வளர்ச்சிக்காக பிர்லா பிரசிஷன் டெக்னாலஜிஸ் மறுபெயரிடம்!




மதுரை , பிப். 12–
துல்லிய பொறியியல் மற்றும் உற்பத்தித் துறையில் முன்னணி நிறுவனமான பிர்லா பிரசிஷன் டெக்னாலஜிஸ் லிமிடெட் (BPTL), தனது புதிய பிராண்ட் அடையாளம் மற்றும் தொலைநோக்கு பார்வையை வெளியிட்டு, தொழில்நுட்பம் சார்ந்த, பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் எதிர்காலத்திற்கு தயாரான வளர்ச்சி பாதையை அறிவித்துள்ளது. இந்த மறுபெயரிடுதல், நம்பிக்கை, தரம் மற்றும் துல்லியத்தில் வேரூன்றிய நிறுவனத்தின் அடுத்தகட்ட முன்னேற்றத்தை வெளிப்படுத்துகிறது.

விண்வெளி, பாதுகாப்பு, 3சி (கணினிகள், தொடர்பு, நுகர்வோர் மின்னணுவியல்) மற்றும் கனரக பொறியியல் போன்ற உயர் வளர்ச்சித் துறையில் நிறுவனம் தனது இருப்பை வலுப்படுத்தி வருகிறது. அவுரங்காபாத், நாசிக் மற்றும் சாலிஸ்கான் ஆகிய மகாராஷ்டிரா உற்பத்தி மையங்கள் அடிப்படையாகக் கொண்டு, பயன்பாடு–குறிப்பிட்ட தயாரிப்புகள் மற்றும் துல்லிய இயந்திரத் திறன்களை விரிவுபடுத்தி, உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கு சேவை செய்யும் திட்டத்தையும் நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

இந்த புதிய தொலைநோக்கைப் பற்றி பேசுகையில், தலைவர் திரு. வேதாந்த் பிர்லா மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ரவீந்தர் சந்தர் பிரேம் ஆகியோர், மேக் இன் இந்தியா முயற்சியுடன் இணைந்து உற்பத்தி திறன்களை மேம்படுத்துதல், தொழில்நுட்ப முதலீடுகள் மற்றும் துல்லியத் தீர்வுகள் மூலம் பல்வேறு துறைகளில் வாடிக்கையாளர்களுக்கு உயர்தர சேவைகளை வழங்கும் நோக்கத்தை வலியுறுத்தினர்.

## அபாரமான 6500mAh பேட்டரி மற்றும் சக்திவாய்ந்த பெர்ஃபார்மன்ஸுக்கான OPPO K14x 5G இந்தியாவில் அறிமுகம் – ரூ.13,499 ஆரம்ப விலை!


கோயம்புத்தூர், பிப். 12–
இந்தியாவில் தனது K Series போன்களின் வெற்றியைத் தொடர்ந்து, OPPO இந்திய புதிய OPPO K14x 5G ஸ்மார்ட்போன் அறிமுகம் செய்துள்ளது. தினசரி பயன்பாட்டிற்கு ஏற்ற பவர், பெர்ஃபார்மன்ஸ் மற்றும் ஸ்மூத்தான அனுபவம் ஆகியவற்றை ஒருங்கே வழங்கும் இந்த போன், மாணவர்கள், கேமராக்கள் மற்றும் அதிக நேரம் போன் பயன்படுத்துபவர்களை குறிவைத்து வடிவமைக்கப்பட்டுள்ளது. 6500mAh பெரிய பேட்டரி, 45W ஃபாஸ்ட் சார்ஜிங், 6.75" 120Hz டிஸ்ப்ளே மற்றும் MediaTek Dimensity 6300 சிப்செட் ஆகிய அம்சங்கள் இதன் முக்கிய சிறப்பம்சங்களாகும்.




OPPO K14x 5G இரண்டு வேரியண்ட்டுகளில் கிடைக்கிறது — 4GB+128GB ரூ.14,999 மற்றும் 6GB+128GB ரூ.16,999. குறிப்பிட்ட வங்கி சலுகைகளுடன், வாடிக்கையாளர்களை இதை ரூ.13,499 ஆரம்ப விலையில் பெற்றுக்கொள்ளலாம். பிப்ரவரி 16 மதியம் 12 மணி முதல் OPPO e–store மற்றும் Flipkart தளங்களில் விற்பனை தொடங்குகிறது.

ஐசி புளூ மற்றும் பிரிசம் வயலட் நிறங்களில் இந்த போன் கிடைக்கும். OPPO இந்திய கம்யூனிகேஷன்ஸ் தலைவர் கோல்டி பட்நாயக் கூறுகையில்,

"இந்திய பயனாளர்களின் நம்பிக்கையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில் OPPO K14x 5G வடிவமைக்கப்பட்டுள்ளது. நீடித்த பேட்டரி, நம்பகமான செயல்திறன் மற்றும் தடையற்ற பயன்பாடு ஆகியவை இந்த பாடலின் முக்கிய வலிமைகள்," என்றார்.



## 30 ஆண்டுகளுக்கு பின் உண்டாகும் அரத்த கேந்திர யோகம்; யாருக்கு நல்லது? பிரச்சனை?



வேத ஜோதிடத்தில் தனி நபரின் கர்ம வினைகளுக்கு ஏற்ப கலவையான பலன்களை அளிக்கும் ஒரு கிரகமாக சனி பார்க்கப்படுகிறார். அதேநேரம் ஆக்ரோஷம் – ஆளுமை நிறைந்த ஒரு கிரகமாக செவ்வாய் பார்க்கப்படுகிறார். இவ்விரு கிரகங்களின் ஒவ்வொரு அசைவும் மிக முக்கியமான ஒரு நிகழ்வாக பார்க்கப்படும் நிலையில், தற்போது இவ்விரு கிரகங்களும் இணைந்து வலிமையான அர்த்த கேந்திர யோகத்தை கொண்டு வருகின்றனர். இந்த அரிய யோகத்தின் தாக்கம் ஒரு சில ராசியினருக்கு நற்பலன்களையும், ஒரு சில ராசிக்கு எதிர்மறையான பலனையும் கொண்டு வருகிறது! குறிப்பாக மேஷம், கடகம் உள்ளிட்ட 3 ராசிக்கு நற்பலன்களை கொண்டு வருவதாக நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**மேஷம் – சாதகமான காலம்!**



மேஷ ராசியில் பிறந்தவர்களுக்கு மிகவும் சாதகமாக ஒரு காலத்தை கொண்டு வருகிறது. மேஷ ராசி கொண்டவர்களின் ஆளும் கிரகமான செவ்வாய், அவர்களின் ஜாதகத்தில் 10–வது வீட்டில் மாற்றத்தை கொண்டு வருகிறது. அதேநேரம் சனி 12–வது வீட்டில் மாற்றத்தை கொண்டு வருகிறார். இந்த மாற்றங்கள், மேஷ ராசியினரின் தொழில் வாழ்க்கையில் எதிர்பார்த்த முன்னேற்றங்களை கொண்டு வருகிறது.

போதுமான வருமானத்தை கொண்டு வருகிறது. பணியிடத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வுக்கான வாய்ப்பினையும் கொண்டு வருகிறது. பொருளாதார நிலை மேம்படும், கடன் பிரச்சனைகளும் முடிவுக்கு வரும்.

**ரிஷபம் – எச்சரிக்கை!**



சனி மற்றும் செவ்வாய் கிரகம் இணைந்து உண்டாக்கும் இந்த அர்த்த கேந்திர யோகம், ரிஷப ராசியினரின் வாழ்க்கையில் சவால்கள் நிறைந்த ஒரு காலத்தை கொண்டு வருகிறது. பணியிடத்தில் அலைச்சல் நிறைந்திருக்கும், உங்கள் பணிகளை குறித்த காலத்திற்குள் முடிக்க சக ஊழியர்களின் உதவி தேவைப்படும். தொழில் வாழ்க்கையில் ஏற்றம் காண நிதி உதவி தேவைப்படும்.

போதுமான நிதியை திரட்டுவதில் சிரமங்கள் நீடிக்கும். பணியிடத்தில் காணப்படும் அலைச்சல் உங்கள் உடல் ஆரோக்கியத்தில் எதிர்மறையான தாக்கத்தை கொண்டு வரும். மன அழுத்தத்தின் வாய்ப்பையும் அதிகரிக்கும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். முன்னெச்சரிக்கையுடன் நடந்துக் கொள்வதன் மூலம் இந்த பிரச்சனைகளை நீங்கள் சமாளிக்கலாம்.

**கடகம் – மகிழ்ச்சி!**



கடக ராசி கொண்டவர்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சிய தருணங்களை கொண்டு வரும் ஒரு காலமாக இது பார்க்கப்படுகிறது. சனி மற்றும் செவ்வாய் கிரகத்தின் சேர்க்கை, உங்கள் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சியான தருணங்களை கொண்டு வருகிறது. முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு மகிழ்ச்சியான தருணங்களை கொண்டு வருகிறது.

பணியிடத்தில் உங்கள் பணிகளை முடிக்க சக ஊழியர்களின் உதவியும், ஆதரவும் கிடைக்கும். உரிய காலத்தில் உங்கள் பணிகளை செய்து முடிக்கும் வசதி வாய்ப்புகளும் கிடைக்கும். செல்வ செழிப்புடன் ஆடம்பரமான வாழ்க்கையை வாழும் வழிகளும் கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும், உங்கள் கடின உழைப்புக்கான அங்கீகாரமும் கிடைக்கும்.

**விருச்சிகம் – நட்டம்!**

விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் வாழ்க்கையில் நட்டத்தை கொண்டு வரும் ஒரு சிறப்பு யோகமாக இது பார்க்கப்படுகிறது. மிகுந்த எதிர்பார்ப்புடன் செய்த முதலீடுகள், எதிர்மறை பலன்களை அளிக்கும். உங்கள் நிதி நிலையை பாதிக்கும், கடன் பிரச்சனைகளை அதிகரிக்கும்.



உலோகம் சார்ந்த தொழில் செய்து வரும் நபர்கள், பணியிடத்தில் எதிர்பாராத விபத்து ஒன்றை சந்திக்கலாம். இதன் தாக்கம், பொருட்செலவு மற்றும் பணச் செலவுக்கு காரணமாக அமையும்.

உங்கள் சேமிப்புகளை பத்திரப்படுத்த முயற்சி செய்யுங்கள். குடும்ப உறவுகளுடன் போதுமான நேரத்தை மகிழ்ச்சியாக செலவிட முயற்சி செய்யுங்கள். மனம் விட்டு வெளிப்படையாக பேசுங்கள், மனதில் இருக்கும் குழப்பங்களுக்கு தீர்வு காணுங்கள். நம்பிக்கையுடன் களத்தில் இறங்கி போராட, எதிர்வரும் சவால்களை சமாளிக்கலாம்!

**தனுசு – வருமானம்!**

தனுசு ராசி கொண்டவர்களின் ஜாதகத்தில் 4–வது வீட்டில் சனி பகவானும், செல்வ வீட்டில் செவ்வாய் கிரகமும் மாற்றத்தை கொண்டு வருகின்றன. இதன் தாக்கம் தனுசு ராசியினர் வாழ்க்கையில் போதுமான வருமானத்தை கொண்டு வருகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட மூலங்களில் இருந்து வருமானத்தை உண்டாக்குகிறது.



வணிகம், வர்த்தகம் தொடர்பான விஷயங்களில் போதுமான வருமானத்தை கொண்டு வருகிறது. தொழில் வாழ்க்கையில் காணப்படும் ஏற்றம், உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலும் பிரதிபலிக்கும். குடும்ப உறவுகளின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வீர்கள், ஆடம்பர தேவைகளையும் பூர்த்தி செய்வீர்கள்.

**கும்பம் – மன அழுத்தம்!**



கும்ப ராசியில் பிறந்தவர்களுக்கு உண்மையில் இந்த பெயர்ச்சி கலவையான பலன்களையே கொண்டு வருகிறது. அதாவது, இன்பமும் – துன்பமும் நிறைந்த ஒரு காலத்தை கொண்டு வருகிறது. வருமானத்திற்கு அதிகமாக செலவுகள் இருக்கும். பயணங்கள் பல செய்யும் வாய்ப்பு கிடைக்கும், பயணங்கள் வழியே புதிய தொழில் வாய்ப்புகளை கொண்டு வரும் வாய்ப்பும் கிடைக்கும்.

இருப்பினும் இந்த வாய்ப்புகளை பயன்படுத்த முடியாத அளவுக்கு பிற பணிகள் உங்களை நோகடிக்கும். பண விஷயத்தில் நீங்கள் எடுக்கும் முடிவுகள், எதிர்மறையான பலன்களை பரிசாக கொண்டு வரலாம். எனவே, எச்சரிக்கையுடன் இருங்கள். பெரிய தொகை கைமாற்றுவது, அறிமுகம் இல்லா தொழிலில் ஒப்பந்தம் கையெழுத்திடுவது கூடாது!

## புதுவை சட்டசபையில் ரூ.5,396 கோடிக்கு இடைக்கால பட்ஜெட்!



புதுச்சேரி, பிப். 12–
புதுவை சட்டசபைக்கான தேர்தல் வரும் ஏப்ரல் மாதம் நடைபெற உள்ளது. தேர்தல் நடைபெற உள்ளதால் வரும் நிதி ஆண்டான 2026–27க்கு முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்யப்படவில்லை. இதற்கு பதிலாக அரசின் செலவினங்களுக்கு இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.

இதற்காக புதுவை சட்டசபை இன்று கூடியது. சபையில் நிதி பொறுப்பு வகிக்கும் முதல்–அமைச்சர் ரங்கசாமி, ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய 5 மாதங்களுக்கு ரூ.5 ஆயிரத்து 396 கோடிக்கான இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்தார்.

சபாநாயகர் குரல் வாக்கெடுப்பு மூலம் இடைக்கால பட்ஜெட்டுக்கு சபையின் ஒப்புதல் பெற்றார். சட்டசபை தேர்தலுக்கு பின் புதிய அரசு அமையும். புதிய அரசு 2026–27ம் ஆண்டுக்கான முழுமையான பட்ஜெட்டை தாக்கல் செய்யும்.

புதுவை சட்டசபையில் 2025–26ம் நிதி ஆண்டிற்கான அரசின் பல்வேறு துறைகளின் கூடுதல் செலவு அறிக்கையை முதல்–அமைச்சர், அமைச்சர்கள் துணை கொடையாக கோரினர். ஒட்டுமொத்தமாக அனைத்து துறைகளுக்கும் சேர்த்து ரூ.537 கோடியே 38 லட்சத்துக்கு கூடுதல் செலவினங்களுக்கு சபையின் ஒப்புதல் கோரப்பட்டது. சபாநாயகர் ஏம்பலம் செல்வம் குரல் வாக்கெடுப்பு நடத்தி இந்த கூடுதல் செலவினங்களுக்கு ஒப்புதல் பெற்றார்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### திடீரென எழுந்து நிற்கும்போது தலை சுற்றுகிறதா..? உடனே இதை பண்ணுங்க..!!



திடீரென அமர்ந்த நிலையில் இருந்தோ அல்லது படுத்திருந்தோ எழுந்திருக்கும்போது ஏற்படும் தலைச்சுற்றல், பார்வை மங்கல் மற்றும் உடல் தள்ளாட்டம் போன்ற அறிகுறிகளைப் பலரும் தற்காலிக அசௌகரியமாகவே கருதி கடந்து செல்கின்றனர். ஆனால், மருத்துவ ரீதியாக 'ஆர்த்தோஸ்டேடிக் ஹைபோடென்ஷன்' (Orthostatic Hy–potension) என்று அழைக்கப்படும் இந்த நிலை, உடலின் ரத்த அழுத்தச் சமநிலையில் ஏற்படும் முக்கியமான மாற்றத்தைக் குறிக்கிறது.

நாம் நிலையை மாற்றும்போது, புவிஈர்ப்பு விசையினால் ரத்தம் இயல்பாகவே கால்களை நோக்கிப் பாயும். அத்தகைய தருணங்களில், இதயத்துடிப்பை அதிகரித்து ரத்த நாளங்களைச் சுருக்குவதன் மூலம் மூளைக்குச் செல்லும் ரத்த விநியோகத்தை உடல் சீராக வைத்திருக்கும். ஆனால், சில நேரங்களில் இந்தத் தற்காலிக மாற்றத்தை உடல் விரைவாகச் செய்யத் தவறும்போது, ரத்த அழுத்தம் சட்டென குறைந்து தலைச்சுற்றல் அல்லது மயக்கம் போன்ற உணர்வுகளை ஏற்படுத்துகிறது.

இதற்குப் பின்னால் சாதாரண நீரிழப்பு, ரத்த சோகை முதல் நரம்பு மண்டலக் குறைபாடுகள் வரை பல காரணங்கள் இருக்கலாம். குறிப்பாக, முதியவர்களுக்கு இந்த அனிச்சைச் செயல்கள் குறைவதால் இப்பாதிப்பு அதிகமாகக் காணப்படுகிறது. சமீபத்திய ஆய்வுகள், சட்டென ரத்த அழுத்தம் குறைவது எதிர்காலத்தில் 'டிமென்ஷியா' (De–mentia) எனப்படும் ஞாபக மறதி நோய்க்கான அறிகுறியாகக் கூட இருக்கலாம் என எச்சரிக்கின்றன.

இந்த தொந்தரவை தவிர்க்க, வேகமான அசைவுகளைத் தவிர்த்து நிதானமாக எழுந்திருப்பது, போதிய அளவு நீர் அருந்துவது மற்றும் எலக்ட்ரோலைட் சமநிலையைப் பராமரிப்பது அவசியம். அடிக்கடி இத்தகைய கிறுகிறுப்பு ஏற்படுமானால், அதை அலட்சியப்படுத்தாமல் மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம். இது தற்காலிக தலைச்சுற்றலை தடுப்பதோடு மட்டுமல்லாமல், பின்னாளில் ஏற்படக்கூடிய எலும்பு முறிவு போன்ற விபத்துகளையும், தீவிர நரம்பியல் பாதிப்புகளையும் தவிர்க்க உதவும்.

# அதிபர் டிரம்புடன் இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு சந்திப்பு!



வாஷிங்டன், பிப். 12–

ஈரான் உடனான அணுசக்தி பேச்சுவார்த்தைகளை விரிவுபடுத்துமாறு அதிபர் டிரம்ப்பை வலியுறுத்தும் நோக்கில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு இன்று அமெரிக்காவுக்கு அரசுமுறை பயணம் மேற்கொண்டார்.

இந்நிலையில், அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் நேதன்யாகு இன்று அந்நாட்டு அதிபர் டிரம்பை வெள்ளை மாளிகைக்குச் சென்று சந்தித்தார். வரை அதிபர் டிரம்ப் உற்சாகமாக வரவேற்றார். அப்போது, ஈரானின் யுரேனியம் வளங்களை நிறுத்த வேண்டும், அதன் பாலிஸ்டிக் ஏவுகணைத் திட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும் மற்றும் கிளர்ச்சிப் படைகளுடனான உறவுகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என இஸ்ரேல் பிரதமர் வலியுறுத்தினார். ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் பல அதிரடி நடவடிக்கைகளுக்கு இஸ்ரேல் தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வருகின்றது.

# பழனியில் அதிமுகவினர் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினர்!



பழனி, பிப். 12–

அதிமுக கழக சார்பில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு துணை தலைவர் குகன் தலைமையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் விலைவாசி உயர்வால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் மற்றும் கூடுதல் சுமைகள் குறித்து கேட்டறிந்தும் கழக பொதுச்செயலாளர் அறிவித்த 5 தேர்தல் வாக்குறுதிகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை பழனி பகுதிகளில் அதிமுகவினர் வீடு வீடாக சென்று வழங்கி விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தனர். முன்னிலையில் இருந்து கலந்து கொண்டவர்கள், கழக எம்ஜிஆர் இளைஞர் அணி துணைச் செயலாளர் ரவி மனோகரன், மாவட்ட கழகப் பொருளாளர் வேணுகோபாலு, பழனி நகர செயலாளர் முருகானந்தம், மாவட்ட இளைஞரணி செயலாளர் அன்வர்தீன், கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் மாரியப்பன், மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் சதீஷ்குமார், நகர தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் குமார், கிளைகழக செயலாளர் ஜெயராமன், நகரக் கழக துணைச் செயலாளர் சிவசுப்பிரமணி, பிரதிநிதி நடராஜ், நகர கலை இணைச்செயலாளர் பாண்டியம்மாள், முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமான ஒரு கலந்து கொண்டனர்.

# மதுரை-போடி தண்டவாள பாதையை கடக்க வேண்டாம்- கலெக்டர் எச்சரிக்கை!



மதுரை, பிப். 12–

மதுரையில் இருந்து தேனி மாவட்டம் போடிக்கு தினசரி காலை, மாலை ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. அதேபோல சென்னையில் இருந்து போடிக்கு மதுரை வழியாகவும், போடியில் இருந்து சென்னைக்கு மதுரை வழியாகவும் வாரத்தில் 3 நாட்கள் அதிவிரைவு ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த சூழலில் இன்று தண்டவாளத்தின் அதிர்வு, அசைவு மற்றும் குறைபாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக அதிர்வு மற்றும் நகர்வு ஆய்வு ரெயில் இன்று மதுரையில் இருந்து போடிக்கு சுமார் 120 கிலோமீட்டர் வேகத்தில் இயக்கப்பட உள்ளதாக ரெயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த வாகனத்தில் ரெயில் என்ஜின் மற்றும் தண்டவாள அதிர்வு அறியும் கருவி பெட்டி ஒன்று, அதிகாரிகள் பணியாளர்கள் ஆய்வு பெட்டி ஒன்று இணைக்கப்பட்டு வருகிறது. காலையில் மதுரையிலிருந்து தூத்துக்குடி வரை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னர் மதியம் 12 மணிக்கு மேல் மதுரையிலிருந்து போடிக்கு சுமார் 120 கிலோமீட்டர் வேகத்தில் ஓ.எம்.எஸ். ஆய்வு ரெயில் வரவுள்ளதாக ரெயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வழக்கமாக 110 கிலோ மீட்டர் வேகம் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் மதுரையிலிருந்து போடி வரை உள்ள தண்டவாள இருப்புப் பாதைகளில் அதிர்வுகள் மற்றும் நகர்வுகள் எதுவும் உள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்வதற்காக இந்த சோதனை ஓட்டம் நடைபெற உள்ளது.

வழக்கமாக 2 அல்லது 3 மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும் ஆய்வு பரிசோதனை என்றாலும் 120 கிலோமீட்டர் வேகத்தில் வருவதால் பொதுமக்கள் விழிப்புணர்வு இல்லாமல் தண்டவாள பகுதிகளில் அமர்ந்திருப்பதோ, தண்டவாளத்தை கடக்க முயற்சிப்பதோ வேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வாகன ஓட்டிகள், ஆடு, மாடு மேய்ப்பவர்கள் அப்பகுதியில் தண்டவாளங்களை கடக்கும் பொழுது எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் செயல்பட வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் மற்றும் ரெயில்வே நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'டிஜிட்டல்' மயமாகிறது... பிளஸ்-2 விடைத்தாள் திருத்தும் பணி!

டெல்லி, பிப். 12–

மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சி.பி.எஸ்.இ.) விடைத்தாள்களைத் திருத்துவதற்கு 'ஆன்–ஸ்கிரீன் மார்க்கிங்' எனும் புதிய டிஜிட்டல் முறையை அறிமுகப்படுத்தி உள்ளது. கல்வித்துறையில் இது மிகப்பெரிய டிஜிட்டல் புரட்சியாகும்.

இதுவரை ஆசிரியர்கள் மாணவர்கள் பேப்பரில் எழுதிய விடைத்தாள்களைப் பேனா கொண்டு திருத்தி வந்தனர். ஆனால் இனி அப்படி கிடையாது. மாணவர்கள் வழக்கம் போல விடைத்தாள்களில் தேர்வு தேர்வை எழுதினாலும்,

அந்த விடைத்தாள்கள் அனைத்தும் ஸ்கேன் செய்யப்பட்டு கம்ப்யூட்டரில் பதிவேற்றப்படும். ஆசிரியர்கள், அதற்காக வடிவமைக்கப்பட்ட பிரத்யேக மென்பொருள் மூலம் கம்ப்யூட்டர் திரையில் விடைத்தாள்களைப் பார்த்து திருத்தி மதிப்பெண்களை வழங்குவார்கள். இந்த நடைமுறை, தற்போது நடைபெறவுள்ள பிளஸ்–2 பொதுத்தேர்வுக்கு உடனடியாக அமல்படுத்தப்படுகிறது.



ஆனால் எஸ்.எஸ்.எல்.சி உள்ளிட்ட மற்ற வகுப்புகளுக்கு பழைய முறையே தொடரும் என்று சி.பி.எஸ்.இ. அறிவித்துள்ளது.

இந்த புதிய முறையில் விடை திருத் தும் பணிக்காக அனைத்து சி.பி.எஸ்.இ. பள்ளிகளும் நாளைக்குள் தங்கள்பள்ளி ஆசிரியர்களின் முழு விவரங்களையும் இணையதளத்தில் பதிவேற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது. ஆசிரியர்களுக்கு 14 முதல் 16–ந் தேதி வரை ஆசிரியர்களுக்கு இதற்கான ஆன்லைன் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

# ஏ.ஐ. வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாத ஊழியர்கள் வெளியேறலாம்- கூகுள் அதிரடி!

கூகுளில் உலகம் முழுவதும் சுமார் 2 லட்சத்திற்கும் அதிகமானவர்கள் நேரடியாக பணிபுரிகிறார்கள்.

இதில் என்ஜினீயர்கள், தரவு ஆய்வாளர்கள், விளம்பர பிரிவு, வர்த்தக பரிவு உள்ளிட்டோர் அடங்குவர். செயற்கை நுண்ணறிவின் தாக்கம் காரணமாக கடந்த 2 ஆண்டுகளில் கூகுளில் விருப்ப ஓய்வு பெற்று 25 ஆயிரம் பேர் வெளியேறினர் என்பது குறிப்பிடத்தக்கது.

விருப்ப ஓய்வு பெற்று குறிப்பிட்ட ஊழியர்கள் வெளியேறவில்லை என்றால் பணிக்கு லாயக்கில்லை என அந்த நிறுவனமே பணிநீக்க நடவடிக்கையில் ஈடுபடுவதாக மறைமுகமாக அறிவித்திருந்தது. தற்போது கூகுள் நிறுவனம் மீண்டும் விருப்ப ஓய்வு நடவடிக்கையை கையில் எடுத்துள்ளது. அந்த நிறுவனத்தின் 5 சதவீத ஊழியர்களுக்கு கூகுள் தலைமை வணிக அதிகாரி பிலிப் ஷிண்ட்லர் எழுதியுள்ள மின்னஞ்சல்




கடிதத்தில் இந்த நடவடிக்கை குறித்து அவர் அறிவித்துள்ளார்.

அதில் அவர் "2025–ம் ஆண்டில் நீங்கள் சாதித்த அனைத்தினாலும் நாம் இந்த ஆண்டை வலுவான நிலைப்பாட்டில் தொடங்குகிறோம். ஆனால் போட்டி நிலைமை வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது; முன்னேற்றத்தின் வேகம் மின்சார வேகத்தைப் போன்றது. பெரிய தாக்கத்தை ஏற்படுத்த செயற்கை நுண்ணறிவை தாராளமாக ஏற்க வேண்டும்" என்று வலியுறுத்திய அவர் "நிறுவனம் செயல்பட வேண்டிய வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாதவர்கள், அல்லது நிறுவனத்தின் முடிவுகளுக்கு கட்டுப்படாதவர்கள் வெளியேறலாம்" என்று அறிவித்துள்ளார். தீர்வு அணிகள், விற்பனை, நிறுவன வளர்ச்சி உள்ளிட்டவற்றில் பணிபுரியும் 10 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் இதனால் பாதிப்படைவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருநள்ளாறு கோவிலில் சனிப்பெயர்ச்சி விழா மார்ச் 6-ந்தேதி நடக்கிறது!

திருநள்ளாறு, பிப். 12–

திருநள்ளாறு கோவிலில் மார்ச் 6–ந்தேதி சனிப்பெயர்ச்சி விழா நடைபெறுகிறது.

புதுவை மாநிலம் காரைக்கால் திருநள்ளாறில்



சனி பகவானுக்கு தனி சன்னதியுடன் கூடிய பிரணாம்பிகை சமேத தர்பாரண்யேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது.

இக்கோவில் சனிப் பெயர்ச்சி விழா மிக விமர்சையாக நடத்தப்படுவது வழக்கம். மார்ச் 6–ந் தேதி காலை 8.24 மணிக்கு கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு சனிபகவான் பிரவேசிக்கிறார்.

அதன்படி திருநள்ளாறு கோவிலில் வாக்கிய பஞ்சாங்கத்தின்படி மார்ச் 6–ந் தேதி சனிப்பெயர்ச்சி விழா நடக்கிறது. விழாவுக்கான பந்தக்கால் முகூர்த்தம் நடைபெற்றது. இதனையொட்டி தர்பாரண்யேஸ்வரர் கோவிலில் கொடி மரத்து விநாயகர் மற்றும் பந்தக்கால்களுக்கு சிறப்பு அபிஷேகம், பூஜைகள் நடத்தப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

பின்னர் மங்கலவாத்தியங்கள் முழங்க பந்தக்கால்கள் பிரகார உலாவாக கொண்டு வரப்பட்டு கோவில் உள் பிரகாரத்தில் பைரவர் சன்னதி மற்றும் ராஜ கோபுரம் அருகில் நடப்பட்டது.

இதில் தருமபுரம் ஆதீன கட்டளை விசாரணை ஸ்ரீமத் சட்டநாத தம்பிரான் சுவாமிகள், புதுச்சேரி நியமன எம்.எல்.ஏ. ராஜசேகரன், கோவில் நிர்வாக அதிகாரி சுப்பிரமணியன் மற்றும் தர்பாரண்யேஸ்வரர் தேவஸ்தானத்துக்கு சொந்தமான 5 கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள், பக்தர்கள் கலந்து கொண்டனர்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881


# வேலை வாய்ப்பு

## கனரக வாகன தொழிற்சாலை, ஆவடி 220 காலியிடங்கள்

Organization Name: Heavy Vehicles Factory, Avadi
Notification No: HVF/RG/FTB/RECT/JTC/2026/01
Job Category: Central Govt Jobs
Employment Type: Contract Basis
Total No of Vacancies: 220 Junior Technician Posts
Place of Posting: Avadi, Chennai
Starting Date: 25.01.2026
Last Date: 14.02.2026
Apply Mode: Offline
Official Website: https://avnl.co.in/



# பழனி மாரியம்மன் மாசித்திருவிழா திருக்கம்பம் சாட்டப்பட்டது; பக்தர்கள் குவிந்தனர்!

பழனி, பிப். 12–

பழனியில் புகழ்பெற்றது மாரியம்மன் கோவில் ஆகும். இக்கோவில் திருவிழா வட்டார அளவில் வெகு சிறப்பாக கொண்டாடப்படும். இக்கோவில் பழனி முருகன் கோவிலின் உப கோவில் ஆகும். இக்கோவில் திருவிழாவையொட்டி திருக்கம்பம் சாட்டப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட திரிசூல வடிவிலான திருக்கம்பம், கோவில் வளாகத்தில் நடப்பட்டது. அப்பொழுது பெண்கள் குலவையிட்டனர். மஞ்சள் நீரும் வேப்பிலையும் கலந்த புனித நீரை ஊற்றி வழிபாடு செய்தனர். வரும் மார்ச் 17ஆம் தேதி கொடியேற்றமும், பூவோடு வைக்கும் நிகழ்ச்சியும், மார்ச் 24 ஆம் தேதி திருக்கல்யாணமும், மார்ச் 25ஆம்தேதி திருத்தேரோட்டம் நடைபெறுகிறது. விழா ஏற்பாடுகளை கோயில் நிர்வாகம் செய்து வருகிறது.

# பொது அறிவிப்பு

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா, ஆண்டிபட்டி டவுன் பஞ்சாயத்து பகுதியில் வசித்து வரும் திரு. சு.முருகானந்தம் மு.மணிமாலா அவர்களின் மகள் மு.சுபஸ்ரீ பிறந்த தேதி : 18.10.2005 பிறந்த இடம் :8/178C(3) மீனாட்சி சுந்தர நாடார் தெரு ஆண்டிப்பட்டி என்ற குழந்தையின் பிறப்பு சம்பந்தமான பதிவு, ஆண்டிபட்டி டவுன் பஞ்சாயத்து பிறப்பு பதிவேட்டில் (2005 2025) காலப்பகுதியில் தேடப்பட்டபோது பதிவு செய்யப்படவில்லை என பதிவு துறை வழங்கிய Non Avail–ability Certificate (20.03.2025) மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆகையால் மேற்கண்ட குழந்தையின் பிறப்பை தற்போது பதிவு செய்ய முனைவதால், இதுகுறித்து யாரேனும் எதிர்ப்பு தெரிவிக்க விரும்பினால், இந்த அறிவிப்பு வெளியான நாள் முதல் 15 நாட்களுக்குள் ஆண்டிபட்டி டவுன் பஞ்சாயத்து அலுவலகத்தில் எழுத்து மூலம் தெரிவிக்கலாம்.

இடம் : ஆண்டிபட்டி, தேதி : 12.02.2026

# பொது அறிவிப்பு

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா, ஆண்டிபட்டி டவுன் பஞ்சாயத்து பகுதியில் வசித்து வரும் திரு. சு.முருகானந்தம் மு.மணிமாலா அவர்களின் மகன் மு. ஸ்ரீவெற்றிசெல்வம் பிறந்த தேதி : 24.04.2004 பிறந்த இடம் : 8/178C(3) மீனாட்சி சுந்தர நாடார் தெரு ஆண்டிப்பட்டி என்ற குழந்தையின் பிறப்பு சம்பந்தமான பதிவு, ஆண்டிபட்டி டவுன் பஞ்சாயத்து பிறப்பு பதிவேட்டில் (2004 2025) காலப்பகுதியில் தேடப்பட்டபோது பதிவு செய்யப்படவில்லை என பதிவு துறை வழங்கிய Non Availability Certificate (20.03.2025) மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.ஆகையால் மேற்கண்ட குழந்தையின் பிறப்பை தற்போது பதிவு செய்ய முனைவதால், இதுகுறித்து யாரேனும் எதிர்ப்பு தெரிவிக்க விரும்பினால், இந்த அறிவிப்பு வெளியான நாள் முதல் 15 நாட்களுக்குள் ஆண்டிபட்டி டவுன் பஞ்சாயத்து அலுவலகத்தில் எழுத்து மூலம் தெரிவிக்கலாம்.

இடம் : ஆண்டிபட்டி, தேதி : 12.02.2026.




# 9801 பேருக்கு பணி நியமன ஆணைகள் - முதலமைச்சர் வழங்குகிறார்!

சென்னை, பிப். 12–

சென்னை, நேரு உள்விளையாட்டரங்கில் நாளை நடைபெறவுள்ள விழாவில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகிய தேர்வு முகமைகள் மூலம் தேர்வு செய்யப்பட்ட 9801 பேருக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்க உள்ளார்.

அதைத் தொடர்ந்து, சென்னை செனாய் நகரில் 62 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 500 தேர்வர்கள் தங்கிப் பயிலக் கூடிய வகையில் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மைய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, முதல் கட்டமாக பல்வேறு துறைகளைச் சேர்ந்த முக்கிய சேவைகள் நெறிப்படுத்தப்பட்டு, கூடுதலாக எளிமைப்படுத்தப்பட்ட 50 சேவைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிமுகப்படுத்துகிறார்.




அனைத்து விதமான நடைமுறைகளையும் கைபேசியிலேயே எளிதாகக் கையாளும் விதமாக "தேர்வுக்களம்" என்னும் கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இதில் ஒன்றிய அரசின் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளின் விவரங்களை ஒரே இடத்தில் பெறும் வகையில் வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.

அரசு ஊழியர்கள் செயற்கை நுண்ணறிவு, தரவு பகுப்பாய்வு, திட்ட மேலாண்மை உள்ளிட்ட திறன்களை மேம்படுத்திக் கொள்ள கட்டணமின்றி பயின்றிட பயிற்சிகள் வழங்கும் இணைய தளத்தை தொடங்கி வைத்து, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் பணியாளர்களுக்கு கல்லூரியின் வளாகத்திலேயே 3 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 அடுக்ககத்தில் 8 குடியிருப்புகள் கொண்ட கட்டிடத்தையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர், அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

# இந்தியாவுடனான ஒப்பந்தம் வரலாற்று சிறப்புமிக்கது- டிரம்ப்!

அமெரிக்கா, பிப். 12–

இந்தியா – அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் ஒரு ஆண்டு பேச்சுவார்த்தைக்கு பிறகு சமீபத்தில் எட்டப்பட்டது. இது தொடர்பாக



இருநாடுகளும் கூட்டறிக்கையை வெளியிட்டன. மேலும், இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த நிலையில் இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் வரலாற்று சிறப்புமிக்கது என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்தார்.

ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசியதாவது:–

உலகின் முதன்மையான எரிசக்தி உற்பத்தியாளராக அமெரிக்கா உள்ளது. நாம் ஒரு பெரிய எரிசக்தி ஏற்றுமதியாளராக மாறி வருகிறோம். கடந்த சில மாதங்களில் நமது நிலக்கரி ஏற்றுமதியை வியத்தகு முறையில் அதிகரிக்க இந்தியா, ஜப்பான், கொரியா மற்றும் பிற நாடுகளுடன் வரலாற்றுச் சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்துள்ளோம்.

நமது நிலக்கரியின் தரம் உலகில் எங்கும் சிறந்ததாக இருக்க வேண்டும். சர்வதேச சந்தைகளில் அமெரிக்க நிலக்கரியை ஒரு சிறந்த தயாரிப்பாக நிலைநிறுத்துவதற்கான ஒரு பகுதியாக இந்தியாவுடனான ஒப்பந்தம் அமைந்துள்ளது.

இந்த ஒப்பந்தங்கள் வெளிநாடுகளில் நிலக்கரி ஏற்றுமதியை கூர்மையாக அதிகரிக்கவும் அமெரிக்கா வின் ஏற்றுமதி திறனை வலுப்படுத்தவும் வடிவமைக்க ப்பட்டுள்ளன. நாட்டின் மாற்றம் விரைவானது மற்றும் தீர்க்கமானது. அது இனி உள்நாட்டு விநியோகத்தில் மட்டும் கவனம் செலுத்துவதில்லை.

உலகளாவிய ஏற்றுமதியில் கவனம் செலுத்தி அதை அதிகரித்து வருகிறது.

இவ்வாறு டிரம்ப் கூறினார்.

# யாருடன் கூட்டணி..? பிரேமலதா காட்டமான பதில்..!



சென்னை, பிப். 12–

2026 தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், தமிழகத்தில் யாருடன் கூட்டணி என்பது குறித்து தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலாதா விளக்கம் அளித்துள்ளார்.. திமுக, அதிமுக என 2 கட்சிகளுடனும் கூட்டணி பேச்சுவார்த்தை நடப்பதாக வெளியான தகவலையும் அவர் மறுத்துள்ளார்.

இன்று சென்னையில் உள்ள தேமுதிக கட்சி தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர் " பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, திமுக அமைச்சர் எ.வ. வேலு ஆகிய 3 பேருமே தேமுதிக உடன் எந்த பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என்று சொல்கின்றனர்.. ஆனால் பத்திரிகையாளர்களுக்கு மட்டும் இரு கட்சிகளுடனும் பேசுகின்றனர் என்ற தகவலை யார் தருகிறார்கள் என்பது தெரியவில்லை.." என்று காட்டமாக பேசினார்..

தொடர்ந்து பேசிய அவர் " எங்கள் மாவட்ட செயலாளர்கள், எங்கள் நிர்வாகிகள், எங்கள் கட்சி தொண்டர்கள் யாருடன் கூட்டணி அமைக்க விரும்புகிறார்களோ அவர்களுடன் தான் இந்த முறை தேமுதிக கூட்டணி அமைக்கும்.. உரிய நேரத்தில் கூட்டணி தொடர்பாக அறிவிப்பு வெளியிடப்படும்.. எங்கள் கட்சி தொண்டர்களே அமைதியாக இருக்கின்றனர்.. பத்திரிகையாளர்கள் மட்டும் ஏன் இவ்வளவு அவசரப்படுகிறீர்கள் என்று தெரியவில்லை.. தேமுதிக எங்கள் கட்சி, என்ன முடிவெடுக்க வேண்டும்? எப்போது அறிவிக்க வேண்டும் என்பதை எங்கள் கட்சி நிர்வாகிகளுடன் கலந்து பேசி உரிய

# அரசியலில் இருந்து என்னை ஒழித்துக்கட்ட முயற்சி ; ராமதாஸ் ' திடுக்'!

விழுப்புரம் , பிப். 12–

விழுப்புரம் மாவட்டம் , தைலாபுரத்தில் நிருபர்களிடம் ராமதாஸ் கூறியதாவது : ஒரு பொய் கூட்டம் , பொய்யும் புரட்டுமே அரசியலாக நடத்திக் கொண்டு இருக்கிறது . நாங்கள் அந்த கூட்டத்தை கட்சியில் இருந்தே நீக்கி விட்டோம் . அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கிவிட்டோம் . அவர்களோடு சேர்ந்த சில கூட்டங்கள் பொய் , பொய்யாக பேசுகிறது . இட்டுக்கட்டி பேசுவது , ஏளனமாக பேசுவது , மனம் புண்படும் வகையில் பேசுவது ஆகியவற்றை செய்கிறது



என்னை மட்டுமல்ல இருபத்து ஆறு ஆண்டு காலம் ஓய்வின்றி உழைத்த கவுரவ தலைவர் ஜிகே மணியையும் வசை பாடுபவதை தொழிலாக செய்து வருகிறது . பொய்யர்கள் கூட்டம் , அரசியல் பேசாமல் என்னை அரசியலில் இருந்தே ஒழித்து விட வேண்டும் என்ற நோக்கத்தில் எதை , எதையோ பேசுகிறார்கள் . டில்லி உயர் நீதிமன்றத்தில் தேர்தல் கமிஷனில் இருக்கும் சில அதிகாரிகளை வைத்துக்கொண்டு வழக்கு போடுகின்றனர் . தேர்தல் கமிஷனை ஒரு வழக்கு போடுவது வேடிக்கையிலும் , வேடிக்கை . இவ்வாறு ராமதாஸ் கூறினார் .

# 2027 ஏப்ரல் முதல் புதிய வாகன சோதனை முறை: கார்கள் விலை உயர வாய்ப்பு!

டெல்லி, பிப். 12–

மத்திய சாலை பாதுகாப்பு மற்றும் நெடுஞ் சாலைத்துறை அமைச்சகம், 'மத்திய மோட்டார் வாகன விதிகள் 1989ல் திருத்தம் செய்து, புதிய அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அதன்படி, '2027, ஏப்., 1 முதல், 'எம் – 1' மற்றும் 'எம் – 2' பிரிவுகளில் உள்ள 'பி.எஸ்., 6' எனப்படும், 'பாரத் ஸ்டேஜ் – 6' வாகனங்களின் உமிழ்வு தரநிலைகள், 'டபிள்யூ.எல்.டி.பி.,' என்ற உலகளாவிய ஒருங்கிணைந்த இலகுரக வாகன சோதனை நடைமுறை படி அளவிடப்படும்' என, திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

'எம் – 1' பிரிவில், எஸ்.யூ.வி., ஹேட்ச்பேக், செடான், எம்.பி.வி., உள்ளிட்ட கார்களும், 'எம் – 2' பிரிவில், எட்டுக்கும் மேற்பட்ட இருக்கைகள் கொண்ட பயணியர் வாகனங்களும் அடங்கும். தற்போது வரை, இந்த வாகனங்களில், 'எம்.ஐ.டி.சி.,' என்ற இந்திய வாகன சோதனை முறையின் படி, புகை உமிழ்வு சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

ஐரோப்பிய யூனியன், 2018 முதல் கடைப்பிடிக்கும், உலகளாவிய ஒருங்கிணைந்த இலகுரக வாகன சோதனை




நடைமுறை, இந்தியாவில் கொண்டு வந்தால், பி.எஸ்., – 6 வாகனங்களின் விலை உயர்ந்து, மைலேஜ் குறையும் என்கின்றனர் வாகன நிபுணர்கள்.

இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: புதிய வாகன சோதனை முறை மூலம், உலகளாவிய தரநிலைக்கு நிகரான மைலேஜ் மற்றும் உமிழ்வு வெளியேற்றத்தை துல்லியமாக கண்டறிய முடியும். தற்போது உள்ள வாகன சோதனை, சிறிய இன்ஜின், மேனுவல் கியர்பாக்ஸ், குறைந்த பவர் வழங்கும் 20 ஆண்டுகளுக்கு முன் இருந்த கார்களுக்காக வடிவமைக்கப்பட்டது. இதில், 31 கி.மீ., சராசரி வேகத்தில், 20 நிமிடம், 11 கி.மீ.,க்கு மட்டும் கார்கள் சோதனை செய்யப்படுகின்றன.

ஆனால், இந்த புதிய சோதனை முறையில், 46.5 கி.மீ., சராசரி வேகத்தில், 30 நிமிடம், 23 கி.மீ., துாரத்திற்கு, வெவ்வேறு வேகங்களில் சோதனை செய்யப்படுவதால், கார்களின் மைலேஜ் 10 முதல் 20 சதவீதம் வரை குறையும் வாய்ப்பு உள்ளது.

அதேபோல், கடும் சோதனையால், உமிழ்வு வெளியேற்றமும், 15 முதல் 25 சதவீதம் வரை உயரும் வாய்ப்பு உள்ளது. இதனால், அதிக மைலேஜ் வழங்குவதற்காகவும், உமிழ்வுகளை குறைக்கவும், கார்களை மேம்படுத்த வேண்டிய தேவை நிறுவனங்களுக்கு ஏற்படும். இதனால், கார்க ள் விலை 5 முதல் 10 சதவீதம் வரை உயரும் என எதிர்பார்க்கலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# துருக்கி பாராளுமன்றத்தில் எம்.பி.க்கள் கைகலப்பு!



துருக்கி, பிப். 12–

துருக்கியின் மந்திரி சபையில் மறுசீரமைப்பை அதிபர் எர்டோகன் மேற்கொண்டார். இதில் அரசாங்க தலைமை வக்கீல் அகின் குர்லெக்கை புதிய நீதி மந்திரியாக நியமித்தார். இதற்கு முக்கிய எதிர்க்கட்சியான குடியரசு மக்கள் கட்சி கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

இந்தநிலையில் பாராளுமன்றத்தில் அகின் குர்லெக் மந்திரியாக பதவி ஏற்கும் நிகழ்ச்சி நடந்தபோது எதிர்க்கட்சி எம்.பிக்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அகின் குர்லெக்கின் பதவி பிரமாணத்தை தடுக்க முயற்சித்தனர். இதனால் ஆளும்கட்சி எம்.பி.க்களுக்கும், எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கும் மோதல் ஏற்பட்டு கைகலப்பானது.

ஒருவரையொருவர் மாறி மாறி தாக்கி கொண்டனர். இதனால் பாராளுமன்றத்தில் பரபரப்பு நிலவியது.

மோதலில் ஈடுபட்டவர்களை பாதுகாவலர்கள் தடுத்தனர். மோதல் ஏற்பட்டபோதிலும் அகின் குர்லெக் மந்திரியாக பதவி ஏற்று கொண்டனர். அவரை சுற்றி ஆளும் கட்சி உறுப்பினர்கள் சூழ்ந்து கொண்டு ஒரு பாதுகாப்பு வளையத்தை அமைத்தனர்.

# சபாநாயகரை வசை பாடிய காங்கிரஸ் எம்பிக்கள்: வீடியோ ஆதாரத்தை வெளியிட்ட மத்திய அமைச்சர்!

புதுடில்லி, பிப். 12–

சபாநாயகர் ஓம்பிர்லாவை காங்கிரஸ் எம்பிக்கள் திட்டியதற்கான வீடியோ ஆதாரத்தை மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ வெளியிட்டு உள்ளார்.

லோக்சபாவில் முன்னாள் ராணுவ தளபதி நரவானே எழுதிய புத்தகத்தை மேற்கோள் காட்டி ராகுலுக்கு பேச அனுமதி மறுக்கப்பட்டதை தொடர்ந்து மத்திய அரசு மற்றும் காங்கிரஸ் இடையே மோதல் ஏற்பட்டு உள்ளது. சபாநாயகர் ஓம்பிர்லாவுக்கு எதிராக காங்கிரஸ் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்துள்ளது.

இது தொடர்பாக நேற்று அறிக்கை வெளியிட்டு இருந்த மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ, " காங்கிரஸ், தங்கள் எம்பிக்களின் இழிவான நடத்தையை பற்றி பெருமை கொள்கிறது. அனைத்து பாஜ எம்பிகளையும் தடுத்துநிறுத்தி வைத்துவிட்டு அங்கு இருந்த, காங்கிரஸ் எம்பிக்களை பாஜ பெண் எம்பிக்கள் எதிர்கொள்ளும்



சூழ்நிலை ஏற்பட்டால், மிகவும் மோசமான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கும். பார்லிமென்ட்ன் கண்ணியம், புனிதத்தை காப்பதில் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது." எனக் குற்றம்சாட்டி இருந்தார்.

இந்நிலையில், இன்று கிரண் ரிஜிஜூ அதற்கான வீடியோ ஆதாரத்தை வெளியிட்டு உள்ளார். சுமார் 9 நொடிகள் ஓடும் வீடியோவை வெளியிட்டு அவர் கூறியுள்ளதாவது: காங்கிரஸ் எம்பிக்கள் 20 – 25 பேர் சபாநாயகரை அவரது அறையில் சூழ்ந்து கொண்டு மோசமாக திட்டியதுடன், பிரதமருக்கு மிரட்டல் விடுத்த போது, எம்பி ஒருவர் சட்டவிரோதமாக எடுத்த வீடியோ. விவாதம் மற்றும் ஆலோசனையில் பாஜவுக்கு நம்பிக்கை உள்ளது. மிரட்டல் விடுப்பதில் நம்பிக்கை இல்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

அந்த வீடியோவில் சபாநாயகர் இருக்கையை எதிர்க்கட்சி எம்பிக்கள் சூழ்ந்து கொண்டு ஆக்ரோஷமாக பேசுவதும், மறுபுறம் கிரண் ரிஜிஜூ தலைமையில் பாஜ எம்பிக்கள் அமைதியாக இருப்பதும் இடம்பெற்றுள்ளன.

# திருப்பதி தரிசனம்.. டிக்கெட் முன்பதிவு.. தேவஸ்தானம் வெளியிட்ட முக்கிய அப்டேட்!

திருப்பதி, பிப். 12–

உலக பிரசித்தி பெற்ற கோயில்களில் ஒன்று திருப்பதி. இங்கு திருப்பதி ஏழுமலையானை தரிசனம் செய்ய தினம்தோறும் பல கோடி பக்தர்கள் வருகை தருகின்றனர். இந்த கோவிலில் சுவாமியை நீங்கள் தரிசனம் செய்ய வேண்டும் என்றால் மூன்று மாதங்களுக்கு முன்பே ஆன்லைனில் டிக்கெட் முன்பதிவு செய்ய வைத்திருக்க வேண்டும். அந்த வகையில் திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் ஆன்லைனில் தரிசன டிக்கெட் முன்பதிவுகள் துவங்கும் தேதி மற்றும் நேரம் குறித்த விபரங்களை மாதா மாதம் முன் கூட்டியே பக்தர்களின் வசதிக்காக வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் தற்போது மே மாதத்திற்கான தரிசனம்




டிக்கெட் புக்கிங் குறித்த தகவல் ஒன்றை தேவஸ்தானம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது திருமலை திருப்பதி ஏழுமலையான் கோவிலில் மே மாத தரிசனம் குறித்து அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகியுள்ளது. அதன் விவரத்தை கீழே காணலாம்.

ஆன்லைன் மின்னணு DIP அட்டவணை

திறக்கும் நேரம்: பிப்ரவரி 18, காலை 10:00 மணி

மூடும் நேரம்: பிப்ரவரி 20, காலை 10:00 மணி

சுப்ரபாத சேவையுடன், தோமாலா சேவை (Thomala Seva), அர்ச்சனை மற்றும் அஷ்டதல பாத பத்மாராதன சேவைகளுக்கான டிக்கெட்டுகளும் e–DIP–யில் கிடைக்கும்.

முடிவுகள்: பிப்ரவரி 20, மதியம் 12:00 மணி

தேர்ந்தெடுக்கப்பட்ட பக்தர்களுக்கான கட்டணம் செலுத்த வேண்டிய கடைசி தேதி: பிப்ரவரி 22, மதியம் 12:00 மணி

TTD செயலி அல்லது ttdevasthanams.ap.gov.in ஐப் பயன்படுத்தவும்.

# தை மாதமும் முடிந்து போனது.. ஓ.பன்னீர்செல்வத்தின் முடிவுதான் என்ன...?

சென்னை, பிப். 12–

அ.தி.மு.க.வின் முன்னாள் பொதுச் செயலாளரும், முதல்–அமைச்சருமான ஜெயலலிதா உயிரோடு இருந்த வரை, கட்சியிலும், ஆட்சியிலும் அவருக்கு அடுத்த நிலையில் இருந்தவர் ஓ.பன்னீர்செல்வம்.

ஆனால், ஜெயலலிதாவின் மறைவுக்கு பிறகு அவரது நிலைமை படுமோசமானது. அ.தி.மு.க.வை விட்டே வெளியேற்றப்பட்ட



ஓ.பன்னீர்செல்வம், தற்போது வரை ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க முடியாமல் திணறி வருகிறார்.

**அதிரடி காட்டிய ஓ.பன்னீர்செல்வம்**

தேர்தல் நிலைப்பாடு குறித்து பத்திரிகையாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பும் போதெல்லாம், "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்று கூறிவந்தார். இந்த நிலையில், கடந்த மாதம் 29–ந் தேதி தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்திய ஓ.பன்னீர்செல்வம், "அ.தி.மு.க.வில் மீண்டும் இணைய நான் ரெடி, இணைத்துக்கொள்ள எடப்பாடி பழனிசாமி ரெடியா?" என்று அதிரடி காட்டினார்.

சற்று நேரத்திலேயே அதற்கு பதிலடி கொடுத்த எடப்பாடி பழனிசாமி, "ஓ. பன்னீர்செல்வத்தை அ.தி.மு.க.வில் மீண்டும் இணைக்க வாய்ப்பே இல்லை" என்று கையை விரித்துவிட்டார்.

**தை மாதமும் முடிந்துவிட்டது**

இதனால், அடுத்தக் கட்ட முடிவு என்ன? என்பதை அறிவிக்காமலேயே ஓ. பன்னீர்செல்வம் அமைதி காத்து வருகிறார். தை மாதமும் இன்றோடு முடிவடையும் நிலையில், தை மாதத்தில் அவருக்கு வழி பிறக்காமலேயே போய்விட்டது.

இனி அவருக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு. நடிகர் விஜய்யின் த.வெ.க. தான். ஏற்கனவே, சசிகலாவும் தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தி, த.வெ.க.வில் இணைய முடிவு செய்துவிட்டார். வரும் தேர்தலில் தென்மாவட்டங்களில் உள்ள 25 தொகுதிகளில் ஆதரவாளர்களை களம் இறக்கவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

**ஆதரவாளர்கள் சொல்வது என்ன?**

இதுபோன்ற முடிவைத்தான் இனி ஓ. பன்னீர்செல்வமும் எடுக்க வேண்டியது வரும் என்று அவரது ஆதரவாளர்களே கூறுகிறார்கள். த.வெ.க.வுடன் கூட்டணி அமைத்து, வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகளை கேட்டு வாங்கி, தான் போட்டியிடுவதுடன், தனது ஆதரவாளர்களையும் களம் இறக்குவது தான் சரியான முடியாக இருக்கும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். அடுத்து, ஓ.பன்னீர்செல்வம் என்ன முடிவு எடுக்கப்போகிறார்? என்பதை பொறுத்து இருந்து பார்ப்போம்.

# பிப்., 20-ல் காற்றழுத்த தாழ்வு பகுதி!

சென்னை, பிப். 12–

'தெற்கு வங்கக்கடலில், பிப்ரவரி 20ல் புதிதாக காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது' என, தனியார் வானிலை ஆய்வாளர் ஹேமசந்தர் தெரிவித்தார்.

இது குறித்து, அவர் கூறியதாவது:

தமிழகம் முழுதும், இரவு நேரத்தில் குளிர், அதிகாலை பனிப்பொழிவு, பிப்., 20 வரை தொடரும். இந்த சமயத்தில் மழைக்கு வாய்ப்பில்லை. ஆனால், தெற்கு வங்கக்கடலில், தமிழகத்தை ஒட்டி, பிப்., 20ல் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது. இதற்கான சாத்தியக்கூறுகள், பிப்., 15ல்



ஓரளவு தெளிவாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இது தொடர்பாக, வானிலை துறை வெளியிட்ட அறிவிப்பில், 'பூமத்தியரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதியில், வளிமண்டல சுழற்சி உருவாக வாய்ப்புள்ளது. அதே சமயத்தில், கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில், வளிமண்டல சுழற்சி ஏற்பட வாய்ப்புள்ளது' என, தெரிவிக்கப்பட்டு உள்ளது.

தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020